**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

## <u>CC.NO- 24/2025</u>

## Dated :18.02.2026

## Deposition of witness for : P.W.1

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் | வயது | : | 25 |
| தந்தை பெயர் | : | சிவலிங்கம் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வெள்ளாளவிடுதி | தொழில் | : | ஆடு மேய்க்கும் தொழில் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

( எதிரி ஆஜர் .)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து, ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை, அதிகாலை சுமார் 04.00 மணியளவில், பிள்ளையார் கோவிலில் மண்டகப்படியை முன்னிட்டு நாடகம் போட்டிருந்தார்கள், நான் சேரில் அமர்ந்து நாடகம் பார்த்துக்கொண்டிருந்தேன், அப்போது எதிரி பிரபு அங்கு வந்து என்னை காலால் உதைத்து கீழே தள்ளிவிட்டார். என்னை பார்த்து போடா புண்டை மகனே என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் அங்கிருந்த சேரை எடுத்து என் நடு மண்டையில் அடித்துவிட்டார். அடிபட்ட என்னை எனது மாமா நாகராஜ் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு சிகிச்சையில் இருந்த போது, போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்று கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான்.

இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** **போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.18 15:54:19 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 24/2025**

**Dated :18.02.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW4 Examined as PW2 (Mahazar Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | வயது | : | 36 |
| தந்தை பெயர் | : | ராமையா | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குட்ட குளவாய்ப்பட்டி | தொழில் | : | விறகு வெட்டும் வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

( எதிரி ஆஜர் .)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விறகு வெட்டும் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2023 ஆம் ஆண்டு, 16 ஆம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை, அதிகாலை 04.00 மணியளவில், குட்டகுளவாய்ப்பட்டி கிராமத்தில் விநாயகர் கோவிலில் நாடகம் நடத்தினார்கள். அ.சா.1 முத்துக்குமார் அங்கு சேரில் அமர்ந்திருந்தார். அப்போது எதிரி அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். எதிரி சேரில் உட்கார்ந்திருந்த அ.சா.1-ஐ காலால் உதைத்து, கீழே தள்ளிவிட்டார், அ.சா.-1 கீழே விழுந்தவுடன் எதிரி அந்த சேரை எடுத்து அ.சா.1-ஐ தலையில் அடித்துவிட்டார். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.-1 ஐ புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். அங்கு அ.சா.1 -இன் தலையில் 18 தையல்கள் போடப்பட்டது. அதன்பிறகு போலிசார் அன்றைய தினம் அதிகாலை 05.00 மணியளவில் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். பின்னர் அதிகாலை 07.00 மணியளவில் பிள்ளையார் கோவில் வந்து விசாரித்தார்கள். எதிரி அன்றைய தினம் அதிகாலை 04.00 மணியில் இருந்து குடிபோதையில் கையில் அரிவாளை வைத்துக்கொண்டு, இன்னைக்கு யாராவது ஒருவரை வெட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டிக்கொண்டிருந்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தினை காவல் நிலையத்தில் வைத்து அன்றையதினம் காலை 09.30 மணியளவில் போட்டுக்கொடுத்தேன். இந்த வழக்கை நடத்த சொல்லி மேற்படி கையொப்பத்தினை போட்டுக்கொடுத்தேன். **(மேற்படி பார்வைமகஜரிலுள்ள முதலாவது**

**சாட்சி கையொப்ப**ம் **மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>( சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை முழுவதும் ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், பகுதியளவு பிறழ்சாட்சியாக பாவித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 16.04.2023 ஆம் தேதி, காலை 11.30 மணியளவில், நானும் உருமையா என்பவரும் சம்பவ இடம் அருகே இருந்த போது, அங்கு வந்த ஆதனக்கோட்டை போலிசார் குற்ற எண் 43/2023 வழக்கில், எங்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**